## PDM COURT, SANKARANKOVIL

**தேதி: 02-08-2019**

**EA.No. 8/2013 in EP.No. 20/2012**

**ம.சா.1 மீண்டும் ஆஜர் சத்தியப்பிரமாணத்தின் பேரில் 1-ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:**

இந்த மனு தாக்கல் செய்த பின்னர் நான் இதே நீதிமன்றத்தில் அ.வ.எண்.290/2012 என்ற வழக்கை இதே மனுவில் கண்ட சொத்தைப் பொறுத்து இந்த மனுவின் எதிர்மனுதாரர் ரத்தினம் மற்றும் சுரேஷ் ஆகியோர்கள் மீது தாக்கல் செய்திருந்தேன் என்றால் சரிதான். அந்த வழக்கு முழு விசாரணைக்கு பின்னர் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த தீர்ப்பை எதிர்த்து நான் சங்கரன்கோவில் சார்பு நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு வழக்கு எண்.16/2016 என தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அந்த வழக்கு 18.07.2019 தேதியில் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். நான் இந்த மனுவில் எனக்கு அழகையா, லெட்சுமியம்மாள் ஆகியோர் 25.11.2010-ல் என் பெயரில் ஒரு அதிகார பத்திரம் எழுதிக்கொடுத்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அது மனு சொத்து சம்பந்தப்பட்டது அல்ல. அந்த 25.11.2010 தேதிய அதிகார பத்திரத்தை நான் இந்த மனுவில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அ.வ.எண்.6/2011 என்ற வழக்கை 1-ம் எதிர்மனுதாரர் வாதியாக இருந்து அழகையா மற்றும் லெட்சுமியம்மாளின் பவர் ஏஜெண்ட் சுரேஷ் ஆகியோர்கள் மீது தாக்கல் செய்திருந்தார் என்றால் சுரேஷ் மீது மட்டுமே வழக்கு தாக்கல் செய்திருந்தார். அழகையா மீது தாக்கல் செய்யவில்லை. இந்த

மனுவில் அழகையா தரப்பினராக உள்ளரா என்றால் உள்ளார். நான் அழகையா, லெட்சுமியம்மாள் ஆகியோர்களின் பவர் ஏஜெண்டாக சுரேஷ் என்று கூறி தான் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் எனது மனுவின் விபரமே தெரியாமல் உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அழகையா, லெட்சுமியம்மாள், ரத்தினம் ஆகியோர்கள் தரப்பினராக உள்ளார்கள். நான் அழகையா, லெட்சுமியம்மாள் ஆகியோர்களை பவர் ஏஜெண்ட் முறையில் சேர்க்கவில்லை. தனிப்பட்ட முறையில் தான் சேர்த்துள்ளேன். நான் இதுவரைக்கும் இந்த மனுவில் அழகையா, லெட்சுமியம்மாள் ஆகியோர்களுக்கு அழைப்பாணை அனுப்ப நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் அனுப்பிய அழைப்பாணை மேற்படி நபர்களுக்கு முறையாக சார்பு செய்யப்படவில்லை என்றாலும், அவ்வாறு நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. அழகையா, லெட்சுமியம்மாள் மலேசிய நாட்டில் எந்த முகவரியில் வசித்து வருகிறார்கள் என்ற விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். அவ்வாறு தெரிந்தும் முறையான முகவரிக்கு அழைப்பாணை அனுப்பப்படாமல் 5 ஆண்டுகளாக வேண்டுமென்றே முறையான முகவரி கொடுக்கப்படாமல் அறிவிப்பு சார்பு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. அ.வ.எண்.6/2011 வழக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த அடிப்படையில் அவர்கள் பத்திரம் பதிந்து தராததால் நீதிமன்றமே 1-ம் எதிர்மனுதாரர் பெயரில் கிரைய ஆவணம் பதிந்து கொடுத்துள்ளது என்றால் நான் மனு சொத்தை கிரையம் பெற்ற

பின்னர் தான் தெரியவந்தது. அந்த கிரைய சொத்தை நீதிமன்றம் கிரைய ஆவணம் மூலம் 1-ம் எதிர்மனுதாரருக்கு எழுதிக்கொடுத்த பின்னர் அதன் தொடர்ச்சியாக நீதிமன்றத்தில் மனு சொத்தின் சுவாதீனத்தை அவரிடம் ஒப்படைக்க மனு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அந்த மனு நிலுவையின் போது நான் இந்த ஆட்சேபணை மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அ.வ.எண்.6/2011 வழக்கின் படி அழகையா 19.04.2010 தேதியில் தாவா சொத்தைப்பொறுத்து சுரேஷ் பெயரில் பொது அதிகார பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான. அதேபோல் அழகையா, அவரது தாயார் லெட்சுமியம்மாள் 16.07.2010 தேதியில் மனு சொத்துக்கள் அல்லாத வேறு சொத்துக்களை பொறுத்து சுரேஷ் பெயரில் அதிகார பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். அதிகார முகவர் என்ற அடிப்படையில் சுரேஷ் ரத்தினத்திடம் கிரைய ஒப்பந்தம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். 12.09.2010 தேதிய கிரைய ஒப்பந்தபடி நிறைவேற்ற ரத்தினம் அ.வ.எண்.6/2011 வழக்கை தாக்கல் செய்தார் என்றால் சரியல்ல. அ.வ.எண்.6/2011 வழக்கு மோசடியாக ஏற்பட்டுள்ளது என்பதால் அதை ரத்து செய்ய நான் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் இந்த மனுவை அதற்காக தான் தாக்கல் செய்துள்ளேன். இந்த மனுவில் அந்த தீர்ப்பு மோசடியானது என நான் பரிகாரம் கோரவில்லை என்றால் சரிதான். ம.சா.ஆ.4 ஆவணம் அழகையா என்பவர் சுரேஷ் என்பவருக்கு 04.10.2010 தேதியில் அனுப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பு என்றால் சரிதான். அந்த அறிவிப்பில் 19.04.2010 தேதியில்

கொடுக்கப்பட்ட பொது அதிகார ஆவணத்தை 30.09.2010 தேதியில் ரத்து செய்யப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த 30.09.2010 தேதிய ரத்து ஆவணத்தை நான் இந்த மனுவில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ம.சா.ஆ.3 மூலம் 05.10.2010 தேதியில் அழகையா சுரேஷ் என்பவருக்கு எழுதிக்கொடுத்த ரத்து ஆவணம் என்றால் சரிதான். 05.10.2010 தேதிவரை அழகையா சுரேஷ் என்பவருக்கு எழுதிக்கொடுத்த அதிகார பத்திரம் ஊர்ஜிதத்தில் தான் இருந்துள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. ஒரு பத்திரம் ஊர்ஜிதத்தில் இருந்தால் தான் அதை ரத்து செய்ய அவசியம் உள்ளது என்றால் சரிதான். ம.சா.ஆ.4 அறிவிப்பில் அந்த பவர் பத்திரத்தை அறிவிப்பின் மூலம் ரத்து செய்ததாக உள்ளது என்றால் சரிதான். அதற்கு பின்னர் தான் ம.சா.ஆ.3 ஆவணம் ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த அறிவிப்பு 30.09.2010 தேதியில் ரத்து செய்யப்பட்டதாக உள்ள நிலையில் அதே தேதியில் என் பெயரில் அதிகார பத்திரம் எழுதிக்கொடுத்தாக ம.சா.ஆ.1-ல் துலங்கவில்லை என்றால் சரிதான். ம.சா.ஆ.3 ரத்து பத்திரம் கொடுப்பதற்கு முன்பாகவே என் பெயரில் ம.சா.ஆ.1 அதிகார பத்திரம் ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். எனவே ம.சா.ஆ.3 ரத்து பத்திரத்திற்கு முன்பே அதிகாரம் ஊர்ஜிதத்தில் உள்ள நிலையில் ம.சா.ஆ.1 ஆவணம் எழுதிக்கொடுக்க லெட்சுமியம்மாளுக்கு அதிகாரம் இல்லை என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி 1-ம் எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுக்கோளுக்கிணங்க ஒத்தி வைக்கப்படுகிறது.**